



# மாண்புமிகு
# தமிழ்நாடு முதலமைச்சர்
# புரட்சித்தலைவி அம்மா
# அவர்கள் அரசின்
# மூன்றாண்டு சாதனைகள்

## தூத்துக்குடி மாவட்டம்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்



# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
# புரட்சித்தலைவி அம்மா அவர்கள்
# அரசின் மூன்றாண்டு சாதனைகள்

## தூத்துக்குடி மாவட்டம்

சிறப்பு வெளியீடு எண். 42

இலவச வெளியீடு

# தமிழரசு

ஜூலை 2014

தொகுப்பு – கள விளம்பரப் பிரிவு

*வெளியிடுபவர் :*
இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

## பதிப்புரை

*"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த*
*வகுத்தலும் வல்லது அரசு" (குறள் 385)*

என்ற வள்ளுவனின் குறளுக்கிணங்க, ஏழை எளிய மக்களின் நலனுக்காக பல்வேறு நலத் திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தலைமையின் கீழ் மூன்றாண்டுகளில் முழுமையான வளர்ச்சியை கண்டோம். மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியினை அழகுற எடுத்துக்காட்டும் வகையில் தூத்துக்குடி மாவட்டத்தில் அரசு துறைகளின் சார்பில் நிகழ்த்தப்பட்ட சாதனைகள் முழுமையாக தொகுக்கப்பட்டு, **"மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மாவின் அரசின் மூன்றாண்டு சாதனைகள் – தூத்துக்குடி மாவட்டம்"** எனும் தலைப்பில், எழில்மிகு கையேடாக செய்தி மக்கள் தொடர்புத் துறையால் வெளியிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தலைமையில், அமைதி! வளம்! வளர்ச்சி! பாதையில் வெற்றி நடை போடும் தூத்துக்குடி மாவட்டத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியை படம் பிடித்துக்காட்டும் விளக்கக் கையேடாக இந்நூல் அமைந்துள்ளது.

இக்கையேட்டினை அனைவரும் படித்து பயன்பெற அன்புடன் விழைகிறேன்.

**மூ. இராசாராம்,** இஆப
அரசுச் செயலாளர்
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை

# தூத்துக்குடி மாவட்டம்





*விலையில்லா அரிசி வழங்கும் திட்டம்*

**விலையில்லா அரிசி வழங்கும் திட்டம்**

❖ 4,23,538 குடும்ப அட்டைதாரர்களுக்கு தலா 20 கிலோ அரிசி வீதம் மாதந்தோறும் 5,103 மெட்ரிக் டன் விலையில்லா அரிசி.



*விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டம்*

**அந்தியோதயா அன்னயோஜனா திட்டம்**

❖ 69,038 குடும்ப அட்டைதாரர்களுக்கு தலா 35 கிலோ அரிசி வீதம் 2,105 மெட்ரிக் டன் விலையில்லா அரிசி.

**ஒரு கிலோ சன்னரக அரிசி ரூ.20க்கு வழங்கும் திட்டம்**

❖ 48,995 குடும்பங்களுக்கு ரூ.48.99 இலட்சம் மதிப்பிலான அரிசி.

**விலையில்லா கறவைப் பசு வழங்கும் திட்டம்**

❖ ரூ.6.64 கோடியில் 1,820 கறவைப் பசுக்கள் வழங்கப்பட்டு, அவை 1,262 கன்றுகளை ஈன்றுள்ளன.

❖ 5,522 லிட்டர் பால் உற்பத்தியாகி 48 பால் கூட்டுறவு சங்கங்கள் புதியதாகத் தொடக்கம்.

**விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டம்**

❖ 10,020 குடும்பங்களுக்கு தலா 4 ஆடுகள் வீதம்

ரூ.12.97 கோடியில் 40,080 விலையில்லா ஆடுகள் வழங்கப்பட்டு, இவை 37,400 குட்டிகளை ஈன்றுள்ளன.

**அம்மா உணவகங்கள்**

❖ தூத்துக்குடி மாநகராட்சியில் 10 அம்மா உணவகங்கள் வாயிலாக ரூ.1க்கு இட்லி, ரூ.3க்கு தயிர் சாதம், ரூ.5க்கு கலவை சாதங்கள் ரூ. 1 கோடி அளவுக்கு விற்பனை.

**உழவர் பெருவிழா**

❖ ரூ. 1.70 கோடி மதிப்பீட்டில் 1,15,500 விவசாயிகள் பயன் அடையும் வகையில் இடுபொருட்கள்.

**புதிய அரசு கலை அறிவியல் கல்லூரி**

❖ கோவில்பட்டியில் ஒரு புதிய அரசு கலை அறிவியல் கல்லூரி.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளில் மரக்கன்றுகள் நடுதல்**

❖ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு 6.60 இலட்சம் மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

**விலையில்லா மின்விசிறி, மிக்ஸி, கிரைண்டர் வழங்கும் திட்டம்**

❖ ரூ.88.48 கோடியில் 2,13,466 நபர்களுக்கு விலையில்லா மிக்ஸி, கிரைண்டர் மற்றும் மின் விசிறிகள்.



*விலையில்லா மின்விசிறி, மிக்ஸி, கிரைண்டர் வழங்கும் திட்டம்*

**விலையில்லா மடிக்கணினிகள் வழங்கும் திட்டம்**

- ❖ ரூ.62.20 கோடி மதிப்பில் 41,168 விலையில்லா மடிக்கணினிகள்.

**விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டம்**

- ❖ ரூ. 7.24 கோடியில் 54,466 மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள்.

**திருமண நிதியுதவியுடன் 4 கிராம் தங்கம் வழங்கும் திட்டம்**

- ❖ 8,232 படித்த ஏழைப்பெண்களுக்கு தலா ரூ.25,000 வீதம் ரூ. 4.14 கோடி திருமண நிதி உதவியும், ரூ. 1.99 கோடி மதிப்பிலான 66.32 கிலோ கிராம் தங்கம்.
- ❖ 4,137 பட்டம் / பட்டயம் படித்த ஏழைப் பெண்களுக்கு தலா ரூ.50,000 வீதம் ரூ.6.59 கோடி திருமண நிதியுதவியும்



விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டம்

ரூ.1.58 கோடி மதிப்பிலான 52.76 கிலோ கிராம் தங்கம் வழங்கல்.

**மாண்புமிகு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்**

❖ 11,855 பயனாளிகளுக்கு ரூ.23 கோடி செலவில் மருத்துவ சிகிச்சை.

**மாவட்ட சிறப்புப் பணிகள்**

❖ தூத்துக்குடி மாநகருக்கு 4 ஆவது குடிநீர் திட்டப்பணிகள் ரூ.282.44 கோடி மதிப்பில் பணிகள் நடைபெற்று வருகிறது.



*தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டம்*

- ❖ கோரம்பள்ளம் குளம் ரூ. 20.07 கோடி மதிப்பில் நீர்த்தேக்கமாக மாற்றப்பட்டு வருகிறது.
- ❖ கோவில்பட்டியில் புதிய ஹாக்கி மைதானம் ரூ. 7 கோடி செலவில் பணிகள் துவங்கப்பட்டுள்ளது.
- ❖ கோவில்பட்டியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ரூ. 797 இலட்சம் செலவில் முதல்கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றது.
- ❖ மணல் மாதா திருத்தலத்தில் குடிநீர், வாகனம் நிறுத்தும் இடம், காத்திருப்போர் கூடம், கழிப்பறை ரூ. 25 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டு மக்கள் பயன்பாடு.
- ❖ வாஞ்சி மணியாச்சி சாலைப் புதியதாக அமைக்க ரூ. 105 கோடி ஒதுக்கீடு செய்து பணிகள் நடைபெற்று வருகின்றன.

- ❖ ஆயுதப்படை காவலர்களுக்கு 1,458 குடியிருப்புகள் ரூ.5,521.95 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டு வருகின்றன.
- ❖ கயத்தாரில் வீரபாண்டியக் கட்டபொம்மனுக்கு மணிமண்டபம் கட்ட ரூ. 1.20 கோடி மதிப்பில் கட்டடப்பணிகள் தொடங்கப்பட்டு உள்ளது.
- ❖ வி.வி.டி சந்திப்பில் புதிய மேம்பாலம் அமைக்க ரூ. 30 கோடி மதிப்பில் நில எடுப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- ❖ ஆயத்தப்படை நிருவாக கட்டடம் ரூ. 280.9 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டு வருகின்றது.
- ❖ திருச்செந்தூருக்கு செல்லும் சாலைகளுக்கு ரூ. 1,807 இலட்சம் செலவில் பணிகள் நடைபெற்று வருகின்றது.
- ❖ சிறைச்சாலைக்கு ரூ. 1,295.45 இலட்சம் செலவில் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.
- ❖ புதிய பேருந்து நிலையம் மூலம் எட்டையபுரம் சாலையினை அகலப்படுத்தும் பணி ரூ. 1,160 இலட்சம் மதிப்பில் நடைபெற்று வருகின்றது.
- ❖ கடலோரக் கிராமங்களில் மலேரியா மற்றும் பூச்சிகள் மூலம் பரவும் நோய்களைக் கட்டுப்படுத்த ரூ. 5 இலட்சம் ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றது.
- ❖ 8 தாலுக்காகளில் கல்விக் கடன் முகாம்கள் நடத்தப்பட்டு ரூ.13 கோடி கடன் உதவிகள் மாணவ,மாணவியர்களுக்கு வழங்கல்.
- ❖ கல்லூரிகளில் பயிலும் 510 மாணவ, மாணவியர்களுக்கு ஒரே நேரத்தில் பயிற்று ஓட்டுநர் உரிமம் வழங்கப்பட்டது.



*முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்*

- 100க்கு மேற்பட்ட ஹோட்டல்களில் ஜனதா சாப்பாடு ரூ. 28 க்கு வழங்கப்பட்டு வருகின்றது.
- விமான நிலைய விரிவாக்கப் பணிகளுக்காக நிலம் கையகப் படுத்தும் பணி நடைபெற்று வருகின்றது.
- ரூ.32.82 கோடி மதிப்பில் திரேஸ்புரம், தருவைக்குளம் மீன்பிடி இறங்கு தளப் பணிகள்.
- ரூ.12.05 கோடி மதிப்பில் மீன்பிடித் துறைமுகம் நவீனமயம்.
- ரூ.6.87 இலட்சம் செலவில் புன்னக்காயல் மீனவர் பயிற்சி நிலையம்.

❖ ரூ.7.5 இலட்சம் செலவில் சங்கொலி மீனவர்கள் கடலில் செயற்கை சுவாசத்திற்குத் தேவையான உபகரணங்கள்.

❖ ரூ.8.47 கோடி மதிப்பில் புன்னக்காயல் கடற்கரையில் தூண்டில் வளைவு அமைக்கும் பணி.

❖ ரூ.8.1 இலட்சம் மதிப்பில் மீனவர்களின் நலனைப் பாதுகாக்கின்ற வகையில் 3 மீட்புப் படகுகள் அமைக்கும் பணி.

❖ ரூ.69.49 கோடி மதிப்பில் வேம்பார், வீரபாண்டியப் பட்டணம், பெரிய தாழை, கல்லாம்மொழி, கீழ வைப்பார் போன்ற இடங்களில் கடல் அரிப்புத் தடுப்புப் பணிகள்.

❖ ரூ.1.15 கோடி மதிப்பில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு புதிய கட்டடம்.

## வருவாய்த் துறை

**சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ்**
**மாத ஓய்வூதியம் ரூ.1,000 வழங்கும் திட்டம்**

❖ 24,878 முதியோர்களுக்கு ரூ.746.34 இலட்சம் ஓய்வூதியம்.

❖ 2,184 ஆதரவற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.65.52 இலட்சம் ஓய்வூதியம்.

❖ 2,159 ஆதரவற்ற கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு ரூ.64.77 இலட்சம் ஓய்வூதியம்.



*முதியோர் ஓய்வூதியம்*

- 50 வயதைக் கடந்த 311 திருமணமாகாத ஏழை மகளிருக்கு ரூ. 9.33 இலட்சம் ஓய்வூதியம்.

- 7,248 ஆதரவற்ற விதவைத் தாய்மார்களுக்கு ரூ.217.44 இலட்சம் ஓய்வூதியம்.

**இந்திரா காந்தி தேசிய விதவை ஓய்வூதியத் திட்டம்**

- 10,253 விதவைத் தாய்மார்களுக்கு ரூ.307.59 இலட்சம் ஓய்வூதியம்.

**இந்திரா காந்தி தேசிய மாற்றுத்திறனாளிகள் ஓய்வூதியத் திட்டம்**

- 1,426 மாற்றுத்திறனாளிகளுக்கு மாதம் ரூ. 1,000 வீதம் ரூ.42.78 இலட்சம் ஓய்வூதியம்.

**நலிந்தோர் நலத்திட்ட நிவாரண நிதியுதவித் திட்டம்**

- ❖ நலிந்தோர் நலத்திட்ட நிவாரண நிதியுதவித் திட்டத்தின் கீழ் 990 பயனாளிகளுக்கு ரூ.99 இலட்சம் உதவித்தொகை.

**விரைவுப் பட்டா மாற்றம் செய்து தரும் புதிய திட்டம்**

- ❖ 13,654 பட்டாக்கள் மாறுதல்.

**விபத்து நிவாரண உதவித் தொகைத் திட்டம்**

- ❖ ஒருவருக்கு ரூ.15,000 விபத்து நிவாரண உதவித் தொகை.

**அகதிகள் முகாமில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களுக்கான உதவித்தொகைத் திட்டம்**

- ❖ முதியோர் மற்றும் விதவை ஓய்வூதியமாக 17 பயனாளிகளுக்கு ரூ.17,000/– வழங்கல்.

**பயோமெட்ரிக் ஸ்மார்ட் கார்டு மூலம் ஓய்வூதியம் வழங்கும் திட்டம்**

- ❖ தேர்ந்தெடுக்கப்பட்ட 122 கிராமங்களில் உள்ள 12,135 ஓய்வூதியதாரர்களுக்கு பயோமெட்ரிக் அட்டை வழங்கப்பட்டு, வங்கிகள் மூலம் ஓய்வூதியம்.
- ❖ ரூ.62.82 இலட்சம் செலவில் 246 கிராம நிருவாக அலுவலர்களுக்கு பிரிண்டர்களுடன் கூடிய மடிக்கணினி.



*முன்னாள் படைவீரர்களின் குடும்ப நபர்களுக்கு கல்வி உதவித்தொகை*

**முன்னாள் படைவீரர்கள் நலத்துறை**

❖ 268 முன்னாள் படைவீரர்கள் குடும்ப நபர்களுக்கு கல்வி உதவித்தொகை மற்றும் வங்கிக்கடன் வட்டி மானிய நிதியுதவி, ரூ.12.28 இலட்சம்.

**மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை**

❖ 4,23,538 குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.84.84 கோடி மதிப்பிலான கோதுமை மாவு, பாமாயில், துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு ஆகியவை மலிவு விலையில் விநியோகம்.



*விலையில்லா மிதிவண்டிகள்*

## பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

❖ 40,227 மாணவ, மாணவியர்களுக்கு ரூ. 12 கோடி மதிப்பீட்டில் விலையில்லா மிதிவண்டிகள்.

❖ 75 நபர்களுக்கு ரூ. 3.60 இலட்சம் மதிப்பீட்டில் தையல் இயந்திரங்கள்.

❖ 45 நபர்களுக்கு ரூ.1.80 இலட்சம் மதிப்பில் விலையில்லா சலவைப் பெட்டிகள்.

❖ 10 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற 25 மாணவ, மாணவியர்களுக்கு தலைசிறந்த பள்ளியில் சேர்ந்து படிக்க ரூ.45,000 நிதியுதவி.

- ❖ 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற 20 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.40,000/– பரிசுத் தொகை.
- ❖ 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற 41 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.1.13 இலட்சம் பரிசுத் தொகை.
- ❖ தந்தை பெரியார் விருதாக 72 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.6.75 இலட்சம் பரிசுத்தொகை.
- ❖ பேரறிஞர் அண்ணா விருதாக 101 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.8.50 இலட்சம் பரிசுத் தொகை.
- ❖ கிராமப்புற பெண்கல்வி ஊக்குவிப்புத் தொகையாக பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர்களுக்கு ரூ. 36.25 இலட்சம் கல்வி உதவித் தொகை.
- ❖ பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் மாணவ, மாணவியர் களுக்கு ரூ. 7.59 கோடி கல்வி உதவித் தொகை.

**உலமாக்கள் உதவித்தொகை**

- ❖ 18 உலமாக்களுக்கு கண் கண்ணாடி வழங்குவதற்கு தலா ரூ.500 வீதம் மொத்தம் ரூ.9,000 உதவித்தொகை.

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

- ❖ 4,865 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.1.66 கோடி மதிப்பில் விலையில்லா மிதிவண்டிகள்.
- ❖ ஆதிதிராவிடர் மாணவ, மாணவியர்களுக்கு ரூ.20.66 கோடி கல்வி உதவித் தொகை.



*உலமாக்களுக்கு ஓய்வூதியம்*

- 623 மாணவ, மாணவியர்களுக்கு சீருடைகள்.
- 496 மாணவ, மாணவியர்களுக்கு பாடப் புத்தகங்கள்.
- 496 மாணவ, மாணவியர்களுக்கு குறிப்பேடுகள்.

## மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை

### தன்னிறைவுத் திட்டம்

- ரூ.2,067.26 இலட்சம் மதிப்பீட்டில் 202 பணிகள்.

### முழு சுகாதாரத் திட்டம்

- ரூ.42.96 இலட்சம் மதிப்பில் 220 பள்ளிகள் மற்றும் அங்கன் வாடிகளில் முழுமையான கழிப்பறைகள்.



*தாட்கோ மூலம் சுயஉதவிக்குழுக்களுக்கு பொருளாதார மேம்பாட்டிற்காக நிதியுதவி*

**சிறப்புச் சாலைகள் திட்டம்**

❖ ரூ.1,767.54 இலட்சம் செலவில் 79 கிலோ மீட்டர் தூரம் சாலைப்பணிகள்.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் பசுமை வீடுகள் திட்டம்**

❖ ரூ.73.15 கோடி மதிப்பீட்டில் ஏழை, எளிய குடும்பங்களுக்குச் சூரிய மின் சக்தியுடன் கூடிய 4,573 பசுமை வீடுகள்.




*பசுமை வீடு திட்டம்*

**தமிழ்நாடு குக்கிராமங்கள் கட்டமைப்பு மேம்பாட்டுத் (தாய் திட்டம்) திட்டம்**

- ❖ 220 கிராம ஊராட்சிகளைச் சார்ந்த 1,338 குக்கிராமங்களில் ரூ.58.09 கோடி மதிப்பில் பணிகள்.

**இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டம்**

- ❖ ரூ.11,691 இலட்சம் செலவில் 9,833 வீடுகள்.

**சுகாதார வளாகங்கள்**

- ❖ 406 ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் ரூ.395.40 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ளன.
- ❖ 24 ஆண்கள் சுகாதார வளாகங்கள் ரூ.9.60 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ளன.

**சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்**

- ❖ ரூ.3,309.23 இலட்சம் மதிப்பீட்டில் 1,507 பணிகள்.



*மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்*

**நபார்டு திட்டம்**

❖ ரூ.14.46 கோடி மதிப்பீட்டில் 26 கிராமப்புறச் சாலைகள்.

**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்**

❖ 2,45,953 குடும்பங்கள் பதிவு செய்யப்பட்டு 3,64,316 தனிநபர்களுக்கு வேலை அடையாள அட்டை வழங்கப்பட்டு, 2,36,14,000 மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டு 7,301 பணிகள் ரூ.370.17 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித் திட்டம்**

❖ ரூ.1,909.85 இலட்சம் செலவில் 287 பணிகள்.

**13ஆவது நிதிக்குழு மானியத் திட்டம்**

❖ ரூ.1,226.16 இலட்சம் மதிப்பீட்டில் 61 சாலைப் பணிகள்.

❖ பயன்படுத்தப்பட்ட பிளாஸ்டிக் கழிவுகளை கொண்டு ரூ.106.19 இலட்சம் செலவில் 6 பிளாஸ்டிக் சாலைகள்.

**சாண எரிவாயு திட்டம்**

❖ ரூ.6.88 இலட்சம் மானியத்துடன் 86 கலன்கள்.

**ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத்திட்டம்**

❖ ரூ.237.96 இலட்சம் மதிப்பீட்டில் 306 பணிகள்.

❖ ரூ.33.80 கோடி மதிப்பில் 84.359 கி.மீ. நீளமுள்ள சாலைகள் சீரமைப்பு.

❖ ரூ.67.11 கோடி மதிப்பில் வளர்ச்சித் திட்டப்பணிகள்.

❖ ரூ.4.36 கோடி மதிப்பீட்டில் 29.08 கிலோ மீட்டர் நீளத்திற்கு மழைநீர் வடிகால்கள்.

**குடிநீர் அபிவிருத்தித் திட்டம்**

❖ ரூ.282.44 இலட்சம் மதிப்பீட்டில் 20 சதவிகிதப் பணிகள்.

**பேரூராட்சிகள்**

❖ மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.35.25 இலட்சம் மதிப்பீட்டில் 20 கழிப்பிடங்கள்.

**தமிழ்நாடு நகர்ப்புற சாலை கட்டமைப்புத் திட்டம்**

❖ ரூ.397.43 இலட்சம் மதிப்பீட்டில் 21 தார்சாலைகள்.

❖ பகுதி–2 திட்டத்தின் கீழ் 3 பேரூராட்சிகளில் ரூ.34 இலட்சம் மதிப்பில் 3 குடிநீர் பணிகள்.

**ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்**

❖ ரூ.1,866.36 இலட்சம் செலவில் தார்சாலைப் பணி, குடிநீர் பராமரிப்புப் பணிகள், வடிகால் பணிகள் மற்றும்

திடக்கழிவு மேலாண்மைப் பணி என மொத்தம் 94 பணிகள்.

**நபார்டு திட்டம்**

- ரூ.1,092.80 இலட்சம் செலவில் 50 தார்சாலைகள்.
- ரூ.3,461.48 இலட்சம் செலவில் மொத்தம் 188 பணிகள்.

**நகராட்சிகள்**

- ரூ.1.50 கோடி மதிப்பில் காயல்பட்டிணம் நகராட்சியில் கட்டடங்கள்.
- ரூ.48.35 இலட்சம் செலவில் 4.327 மீட்டர் நீளம் பிளாஸ்டிக் கழிவுகளைக் கொண்டு தார்சாலை.
- வறட்சி நிவாரண நிதியின் கீழ் ரூ.187 இலட்சம் மதிப்பில் 75 ஆழ்துளை கிணறு மற்றும் மினிபவர் பம்ப்.

**ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்**

- ரூ.2,002 கோடி செலவில் 7 பணிகள்.
- ரூ.111.49 இலட்சம் செலவில் கோவில்பட்டி மற்றும் காயல்பட்டிணம் நகராட்சிகளில் குடிநீர் அபிவிருத்திப் பணிகள்.

**தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு ஆணையம்
(மகளிர் திட்டம்)**

- 1,585 மகளிர் சுயஉதவிக்குழுக்கள் ரூ.570 இலட்சம் தொகை சேமிப்பாக வைத்துள்ளனர்.
- 1,336 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல்நிதிக் கடனாக ரூ.8.02 கோடியும், 240 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு பொருளாதாரக் கடனாக ரூ.7.80 கோடியும் வழங்கப்பட்டுள்ளது.

- ❖ 13,242 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.306 கோடி வங்கிகளின் மூலம் நேரடிக் கடன்.
- ❖ 172 ஊராட்சி அளவிலான குழுக் கட்டமைப்புகளுக்கு ஊக்கத் தொகையாக ரூ.172 இலட்சம் கடனுதவி.
- ❖ 5 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு பெருங்கடனாக ரூ.186.87 இலட்சம் கடனுதவி.
- ❖ 530 இளைஞர்களுக்கு ரூ.32.54 இலட்சம் செலவில் தொழில் மேம்பாட்டுப் பயிற்சி.

## சமூக நலம் மற்றும்
## சத்துணவுத் திட்டத்துறை

### குழந்தைத் திருமண தடுப்புச் சட்டம் 2005

- ❖ 21 பெண் குழந்தைத் திருமணங்கள் தடுத்து நிறுத்தம்.

### பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்

- ❖ 664 குடும்பங்களைச் சார்ந்த 1,328 பெண் குழந்தைகளுக்கு ரூ.2.89 கோடி.

### தொட்டில் குழந்தைத் திட்டம்

- ❖ அரசுத் தொட்டிலில் போடப்பட்ட 4 ஆண் குழந்தைகள் மற்றும் 6 பெண் குழந்தைகளை அரசு எடுத்து வளர்த்து வருகிறது.
- ❖ 1 ஆண் குழந்தை, 1 பெண் குழந்தை என 2 குழந்தைகளை குழந்தை இல்லாத பெற்றோர்களுக்கு தத்து வழங்கப்பட்டுள்ளது.

### புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்

- 12 ஊராட்சி ஒன்றியங்கள், 1 மாநகராட்சி, 1 நகராட்சி என 1,489 பள்ளிகளில் 5 வயது முதல் 14 வயது வரை மொத்தம் 1,19,657 மாணவ, மாணவிகள் பயன்.

### 10 வகை கலவை சாதங்கள்

- ரூ.11.16 இலட்சம் செலவில் 2,880 மாணவ, மாணவிகளுக்கு 10 வகையான சத்தான கலவை சாதங்கள்.



தொட்டில் குழந்தைத் திட்டம்

### ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்

- 1,428 முதன்மை மையங்களும் 81 குறு மையங்களும் செயல்பட்டு வருகின்றன.
- நாளொன்றுக்கு 26,716 குழந்தைகளுக்கு, முன்பருவக் கல்வி மற்றும் மதிய உணவு.
- 6 மாதம் முதல் 36 மாதங்கள் வரையுள்ள 39,846 குழந்தைகளுக்கு, இணை உணவு.




*மாற்றுத்திறனாளிகளுக்கு மோட்டார் பொருத்திய மூன்று சக்கர வாகனம்*

❖ 73,904 இணை உணவு உண்ணும் கர்ப்பிணிகள், 6,799 பாலூட்டும் தாய்மார்கள் பயன்.

❖ 40,717 குழந்தைகளுக்கு முட்டைகள்.

**மாற்றுத் திறனாளிகள் நலத்துறை**

❖ மாற்றுத் திறனாளிகளை திருமணம் செய்து கொள்ளும் 36 சாதாரண நபர்களுக்கு ரூ.8,00,000 திருமண உதவித்தொகை.

- ❖ 1,091 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.56.60 இலட்சம் செலவில் நலத்திட்ட உதவிகள்.
- ❖ 26,831 நபர்களுக்கு மாற்றுத் திறனாளிகளுக்கான அடையாள அட்டைகள்.
- ❖ 800 நபர்களுக்கு இலவச பேருந்து பயணச் சலுகை அட்டைகள்.
- ❖ 1,077 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1.08 கோடி மதிப்பில் உதவி உபகரணங்கள்.
- ❖ கடுமையாக இயலாதோர், மனவளர்ச்சி குன்றியோர் மற்றும் தசைச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட 4,363 நபர்களுக்கு மாதம் தலா ரூ. 1,000/– வீதம் பராமரிப்பு உதவித்தொகை.

## வேளாண்மைத்துறை

### விதைப்பெருக்குத் திட்டம்

- ❖ 16.0 மெட்ரிக் டன் சான்று நெல் விதைகள், 27.0 மெட்ரிக் டன் சிறுதானிய சான்று விதைகள் 150.0 மெட்ரிக் டன் பயறு வகைப் பயிர்கள், 7 மெட்ரிக் டன் எண்ணெய் வித்துப் பயிர்களின் சான்று விதைகள் விநியோகம்.
- ❖ 5,800 விவசாயிகளுக்கு ரூ.13 இலட்சம் மானியத்தில் விதை கிராமத் திட்டத்தின் கீழ் 50 சதவீத மானிய விலையில் நெல், சிறு தானியங்கள், பயறு வகை பயிர்களின் சான்று விதைகள் மொத்தம் 66.0 மெட்ரிக் டன்கள் வழங்கல்.



*வேளாண் உற்பத்திக்கான விருது*

- ❖ தரமான சான்று விதைகள் உற்பத்திப் பற்றிய 126 தொழில்நுட்ப பயிற்சிகள் ரூ.17.53 இலட்சம் மதிப்பீட்டில் அளிக்கப்பட்டு 7,000 விவசாயிகள் பயன்.

**தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம்**

- ❖ ரூ. 308.54 இலட்சம் செலவில் திருத்திய நெல் சாகுபடி முறைகள், பயறு வகைகள், தீவிர சிறுதானிய உற்பத்தி திட்டம், அதிக விளைச்சல் பெற துல்லிய பண்ணையம் அமைத்தல்.

**மீனவர் நலன்**

- ❖ மீன்பிடித்தடைக்கால நிவாரண உதவி ரூ.2,000 ஆக உயர்த்தப்பட்டு 51,073 மீனவக் குடும்பங்களுக்கு ரூ.10.26 கோடி மதிப்பில் நிவாரணம்.



மீன்பிடித்தடைக்கால நிவாரண உதவித் தொகை

**மீன்பிடிப்புக் குறைந்த கால நிவாரண உதவி வழங்கும் புதிய திட்டம்**

❖ ரூ.4,000 வீதம் 35,120 மீனவக்குடும்பங்களுக்கு ரூ.14.04 கோடி மதிப்பில் நிவாரணம்.

## வேளாண் பொறியியல் துறை

**தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம்**

❖ 701 விவசாயிகளுக்கு ரூ.271.34 இலட்சம் மானியத்தில் வேளாண்மை இயந்திரங்கள்/கருவிகள்.

**வேளாண்மை இயந்திரமயமாக்குதல் திட்டம்**

❖ ரூ.18.85 இலட்சம் மானியத்தில் 48 விவசாயிகளுக்கு டிராக்டர், பவர் டில்லர், ரோட்டவேட்டர் போன்ற இயந்திரங்கள், கருவிகள் வழங்கப்பட்டன.

**செயற்கை முறையில் செறிவூட்டும் திட்டம்**

❖ ரூ.28.328 இலட்சம் செலவில் 13 கிராம ஊரணி கசிவு நீர்க்குட்டை தடுப்பணைகள்.

**மழைநீர் சேகரிப்பு மற்றும் மேலாண்மைத் திட்டம்**

❖ ரூ.37.98 இலட்சம் செலவில் 32 பண்ணைக் குட்டைகள், தடுப்பணைகள் மற்றும் கிராமக் குட்டைகள்.

❖ 2,970 விவசாயிகள் பயன்பெறும் வகையில் ரூ.483.48 இலட்சம் மதிப்பீட்டில் திட்டங்கள்.

## தோட்டக்கலைத்துறை

**ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம்**

❖ உயர் விளைச்சல் தரும் வீரிய ஒட்டுரக காய்கறி விதைகள் மற்றும் நடவுச் செடிகள் ரூ.8 இலட்சம் மதிப்பில் 50 சதவிகித மானியத்தில் 803 விவசாயிகளுக்கு விநியோகம்.

**துல்லிய பண்ணையத் திட்டம்**

❖ 90 எக்டேர் பரப்பளவில் ரூ.18 இலட்சம் மதிப்பில் உயர் விளைச்சல் தரும் காய்கறி, வாழை சாகுபடி.

**சொட்டுநீர் பாசனத் திட்டம்**

❖ 222 விவசாயிகளுக்கு ரூ.96.31 இலட்சம் மதிப்பிலான சொட்டுநீர்ப் பாசனம்.

### திருந்திய நெல் சாகுபடித் திட்டம்

❖ 800 விவசாயிகளுக்கு ரூ.24 இலட்சம் மானியம்.

### மானாவாரி பகுதி மேம்பாட்டுத் திட்டம்

❖ தோட்டக்கலைச் சார்ந்த பண்ணையம் அமைக்க ரூ.41.5 இலட்சம் செலவில் 100 எக்டேர் நிலம் சீர்செய்து காய்கறி சாகுபடி செய்யும் வகையில் விதைகள், கன்றுகள், இடுபொருள்கள் வழங்கப்பட்டன.

### தேசிய நுண்ணீர் பாசன இயக்கம்

❖ தோட்டக்கலை பயிர் சாகுபடி செய்யும் சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவிகித மானியத்திலும் இதர விவசாயிகளுக்கு 75 சதவிகித மானியத்திலும் ரூ.96.31 இலட்சம் மதிப்பீட்டில் 213.0 எக்டேர் பரப்பில் சொட்டு நீர்ப் பாசனம்.

### தேசிய மூலிகை பயிர்கள் இயக்கம்

❖ ரூ.22.5 இலட்சம் மதிப்பீட்டில் சென்னா (அவுரி) சாகுபடிக்கென மானியம் பெறப்பட்டு முழுத் தொகையும் விவசாயிகளுக்கு வழங்கப் பட்டுள்ளது.

## வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை

### வேளாண் வணிகத் திட்டம்

❖ ரூ.32.28 இலட்சம் மதிப்பிலான 286.38 மெ.டன் விலைப் பொருட்கள் இருப்பு வைக்கப்பட்டு 14 நபர்களுக்கு ரூ.19.87 இலட்சம் பொருளீட்டுக் கடன்.

❖ 9 விற்பனைக் கூடப் பகுதிகளில் 124.4 மெ.டன் அளவுள்ள விலைப்பொருட்களுக்கு கட்டணத் தொகையாக ரூ.69.43 இலட்சம் வசூல் செய்யப்பட்டுள்ளது.

## கால்நடை பராமரிப்புத்துறை

### தீவனப் பயிர்த்திட்டம்

❖ 350 ஏக்கர் நிலப்பரப்பில் தீவனப் பயிர் சாகுபடிக்காக 100 சதவிகித மானியத்தில் ரூ.42 இலட்சம் ஒதுக்கீடு.

### கோழிப்பண்ணை வளர்ச்சித் திட்டம்

❖ ரூ.2.60 கோடி மதிப்பில் 50 சதவிகித மானியத்துடன் 125 நாட்டுக்கோழி பண்ணைகள்.

❖ கால்நடை மருந்தகங்களுக்கு ரூ.26.66 இலட்சம் வீதம் 2.13 கோடி மதிப்பில் 8 புதிய கட்டடங்கள்.

❖ ரூ.58.50 இலட்சம் மதிப்பில் 12 கால்நடை மருந்தகங்கள்.

### தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம்

❖ ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் 2 கால்நடை மருந்தகங்கள்.

### தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டம்

❖ கால்நடைகள் பயன்பெறும் வண்ணம் நோய் தடுப்பு மற்றும் நோய் நீக்கப் பணிகளுக்காக ரூ.2 இலட்சம் மதிப்பில் 172 கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம்கள்.



*விலையில்லா கறவை மாடுகள் வழங்கும் திட்டம்*

**வறட்சி மேலாண்மைத் திட்டம்**

❖ 50 சதவிகித மானியத்தில் கால்நடைகளுக்கு குறைவில்லா தீவனம் வழங்கும் பொருட்டு 700 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ. 36.52 இலட்சம் ஒதுக்கீட்டில் 570 பயனாளிகள்.

## வனத்துறை

❖ சமூகக் காடுகள் கோட்டத்திலுள்ள கிராம நலக் காடுகள் ஏலம் மூலம் பெறப்பட்ட ரூ.93 இலட்சம் தொகையில் ரூ.43.82 இலட்சம் சம்பந்தப்பட்ட ஊராட்சிகளுக்குப் பங்குத் தொகை பகிர்ந்தளிப்பு.




*விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டம்*

## கூட்டுறவுத்துறை

- ❖ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அமைக்கப்பட்ட மாநில கூட்டுறவு தேர்தல் ஆணையம் வாயிலாக 252 தொடக்க கூட்டுறவு சங்கங்களுக்கும், 4 மத்திய கூட்டுறவு சங்கங்களுக்கும் தேர்தல்.

- ❖ 33,728 விவசாயிகளுக்கு ரூ. 22,290.14 இலட்சம் குறுகிய கால பயிர்க்கடன், 7,925 ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்தவர்களுக்கு ரூ.4,951.02 இலட்சம் பயிர்க்கடன், 1,363 விவசாயிகளுக்கு ரூ. 2,292.20 இலட்சம் முதலீட்டுக் கடன், வேளாண் விளைப்பொருட்கள்

தொடர் ஈட்டு கடனாக 524 விவசாயிகளுக்கு ரூ.716.84 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

❖ தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்கள் மூலம் ரூ.4,85,264 விவசாயிகளுக்கு ரூ.1,85,393.58 இலட்சம் நகைக்கடன், 12 மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.3 இலட்சம், சிறுபான்மையினருக்கு 82 நபர்களுக்கு ரூ.72.15 இலட்சம் என பல்வேறு கடன் வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகள் தங்கள் விளைப்பொருட்களை சேமிக்க ஏதுவாக 34 கிடங்குகள் ரூ. 391 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ளது.

**மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு அலகு**

❖ மாவட்டத்தில் எச்.ஐ.வி. பாதிக்கப்பட்ட 235 நபர்களுக்கு இலவச பேருந்து பயண அட்டைகள், 2 நபர்களுக்கு விலையில்லா கால்நடைகள்.

❖ உலக எய்ட்ஸ் தினத்தன்று 26 குழந்தைகளுக்கு 96,000 மதிப்பில் கல்வி மற்றும் மருத்துவ உதவித் தொகை.

**உழவர் பாதுகாப்புத் திட்டம்**

❖ 65 நபர்களுக்கு தலா ரூ.1,000/– வீதம் மாதாந்திர உதவித்தொகை.

## பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருத்துவத்துறை

**டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம்**

❖ 66,899 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ரூ.32.39 கோடி வழங்கல்.

**பள்ளி சிறார் கண்ணொளி காப்போம் திட்டம்**

❖ 6 மற்றும் 7ஆம் வகுப்பு மாணவர்களுக்கு இலவச கண் பரிசோதனை செய்யப்பட்டு 3,275 மாணவர்களுக்கு கண் கண்ணாடிகளும், பல் பாதுகாப்புத் திட்டத்தில் 46,800 குழந்தைகளுக்கு பல் சிகிச்சையும், யானைக்கால் நோயினால் பாதிக்கப்பட்ட 20 நபர்களுக்கு மாதந்தோறும் ரூ.400 உதவித்தொகை.

**பெண்கள் நலத்திட்டம்**

❖ கருப்பை வாய் புற்றுநோய் கண்டறியப்பட்டு சிகிச்சை அளித்திட இதுவரை 3 முகாம்கள் நடத்தப்பட்டு 65 நபர்களுக்கு கர்ப்பப்பை வாய் புற்றுநோயும் 15 நபர்களுக்கு மார்பக புற்றுநோயும் கண்டறியப்பட்டு தொடர் சிகிச்சை.

**மாவட்ட பார்வை இழப்புத் தடுப்புச் சங்கம்**

❖ கண்புரை நோய் மற்றும் இதர குறைபாடுகளுக்கு நவீன சிகிச்சைப் பெற்று 75,000 நபர்கள் பயன். 55,000 பள்ளிக் குழந்தைகளுக்கு கண் பரிசோதனை.

❖ 10,000 மாணவ, மாணவியர்களுக்கு பார்வைத் திறன் மூக்குக் கண்ணாடிகள் வழங்கி பார்வை குறைபாடு தவிர்க்கப்பட்டது.

## இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை

❖ 2,000 நபர்களுக்கு சிகிச்சை.

❖ டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்க அனைத்து மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் நிலவேம்பு குடிநீர், பப்பாளி இலைச்சாறு,




*மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா சீருடைகள், பாடப் புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள்*

மலைவேம்புச் சாறு புற மற்றும் உள் நோயாளிகளுக்கு வழங்கப்பட்டது.

## பள்ளிக் கல்வித்துறை

- ❖ **12,433** மாணவ, மாணவியர்களுக்கு ரூ.**22.38** கோடி மதிப்பீட்டில் விலையில்லா மடிக்கணினிகள்.
- ❖ **1,58,230** மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா பாடநூல்கள்.
- ❖ **2,36,129** மாணவ, மாணவிகளுக்கு பாடக்குறிப்பேடுகள்.
- ❖ **18,457** மாணவ, மாணவிகளுக்கு ரூ.**6.18** கோடி மதிப்புள்ள விலையில்லா மிதிவண்டிகள்.
- ❖ **6** முதல் **8**ஆம் வகுப்பு பயிலும் **22,883** மாணவ, மாணவிகளுக்கு தலா **4** செட் வீதம் விலையில்லா வண்ணச் சீருடைகள்.

❖ வருவாய் ஈட்டும் தாய் தந்தையர் விபத்தில் இறந்தாலோ அல்லது நிரந்தர முடக்கம் அடைந்தாலோ அவர்தம் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை ரூ.50,000 வழங்கும் திட்டத்தின் கீழ் 12 மாணவ, மாணவிகளுக்கு ரூ.6 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களை 6 மாணவக் கண்மணிகள் பெற்று சாதனைப் படைந்துள்ளனர். மேலும் பன்னிரெண்டாம் வகுப்பில் 95.44 சதவிகிதம் தேர்ச்சி பெற்று மாநில அளவில் 2ஆம் இடம் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

❖ 6 முதல் 12ஆம் வகுப்பு பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் 1,58,230 விலையில்லா பாடநூல்கள்.

❖ 36,040 மாணவ, மாணவியர்களுக்கு இலவச பேருந்து பயண அட்டைகள்.

❖ 6,7,8ஆம் வகுப்பு பயின்று வரும் 22,883 மாணவ,மாணவியருக்கு விலையில்லா சீருடைகள்.

❖ வரைகலைப்பெட்டி 1,142, வண்ணப் பென்சில்கள் 34, புத்தகப் பை 1,35,091, புவியியல் வரைபடம், 93,765 விலையில்லா காலனி 91,825 உள்ளிட்ட கல்வி உபகரணங்கள்.

## அனைவருக்கும் கல்வி இயக்கம்

❖ ஆசிரியர்கள் கற்றல், கற்பித்தல் உபகரணங்கள் தயாரிப்பதற்காக ஆசிரியர் மானியம் ரூ.500 வீதம் ரூ.62.425 இலட்சம்.



*கல்வி உதவித் தொகை*

❖ பள்ளி செல்லா மற்றும் இடைநின்ற குழந்தைகள் கல்வி பயில ரூ.132.906 இலட்சம்.

❖ பள்ளிக்கு தேவையான பள்ளி தளவாடப் பொருட்கள் வாங்குவதற்காக 4,088 பள்ளிகளுக்கு (1 முதல் 5 வகுப்புகள்) தலா ரூ.5,000 வீதம் ரூ.204.300 இலட்சம்.

❖ 1,513 பள்ளிகளுக்கு (6 முதல் 8 வகுப்புகள்) தலா ரூ.7,000 வீதம் ரூ.105.590 இலட்சம் வழங்கல்.

❖ கட்டுமானப் பணிகளுக்கென்று ரூ.2,262.905 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு இதுவரை ரூ.1,399.422 இலட்சம் செலவில் பணிகள்.

## குடிசை மாற்று வாரியம்

❖ ரூ.240.78 இலட்சம் மதிப்பில் 78 அடுக்குமாடிக் குடியிருப்புகள்.

### நகர்ப்புற குடிசை பகுதி, சுற்றுச்சுவர் மேம்பாட்டுத் திட்டம்

❖ 1,584 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் ரூ.58.4 இலட்சம் மதிப்பில் குடிசைப் பகுதிகள் நடைபாதை, சாலைவசதி மற்றும் கழிவுநீர் கால்வாய்கள் அமைத்தல் போன்ற அடிப்படைப் பணிகள்.

### மாவட்டத் தொழில் மையம்

❖ 1,212 குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு தொழில் முனைவோர் ஒப்புகைச் சான்று. 1,834 பொதுப் பிரிவினருக்கும் 85 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கும் புதிய தொழில் தொடங்குவதற்கு அனுமதி. வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் 276 இளைஞர்களுக்கு ரூ.74.43 இலட்சம் மானியத்துடன் ரூ.488.82 இலட்சம் கடனுதவி.

❖ குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு மூலதன மானியமாக ரூ.241.13 இலட்சமும், மின் மானியமாக ரூ.37.71 இலட்சமும், மின்னாக்கி மானியமாக ரூ.52.14 இலட்சமும் மதிப்புக் கூட்டு வரி மானியமாக ரூ.137 இலட்சமும் தொழில் நிறுவனங்களை ஊக்குவிக்கும் வகையில் வழங்கப்பட்டுள்ளது.

### புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம்

❖ 11 நபர்களுக்கு ரூ.745.11 இலட்சம் மதிப்பில் ரூ.155.47 இலட்சம் மானியமாக வழங்க முடிவு செய்யப்பட்டு இதுவரை 5 நபர்களுக்கு ரூ.57.84 இலட்சம் வங்கிகளால் கடன் தொகை வழங்கப்பட்டு 3 நபர்களுக்கு ரூ.23.74 இலட்சம் மானியம்.

## வேலைவாய்ப்புத்துறை

❖ வேலைவாய்ப்பிற்காக பதிவு செய்து 5 ஆண்டுகள் முடிவுற்ற 4,189 இளைஞர்களுக்கு ரூ.1,00,82,300 உதவித் தொகை.

❖ 7 அனைத்து வகை மாற்றுத் திறனாளிகளுக்கும் 22 தாழ்த்தப்பட்டோர் மற்றும் இதர பிரிவினருக்கும் பணி நியமனம் செய்திட பரிந்துரை செய்து வேலைவாய்ப்பு வழங்கல்.

### அமைப்பு சாராத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம்

❖ கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தின் மூலம் 7,210 நபர்களுக்கு ரூ.2.26 கோடி மதிப்பீட்டில், அமைப்பு சாரா தொழிலாளர்கள் நல வாரியத்தின் சார்பில் 51,165 நபர்களுக்கு ரூ.9.36 கோடி மதிப்பீட்டிலும் கல்வி, மகப்பேறு, திருமண நிதியுதவி, இயற்கை மரண உதவி, கண்கண்ணாடிக்கான உதவித்தொகை, ஓய்வூதியத் தொகை, விபத்து மரண உதவித்தொகை, விபத்து ஊன உதவித்தொகை.



*பணி நியமன ஆணை*

## சிறுசேமிப்புத்துறை

- சிறுசேமிப்பு மொத்த வசூல் தொகை ரூ.259 கோடி திரட்டப்பட்டுள்ளது. மகளிர் முகவர்களுக்கு சிறுசேமிப்புத் திட்டத்தில் முதலீடு திரட்டியமைக்கு ரூ.3 கோடி ஊக்கத்தொகை.

### தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

- ரூ.54.15 கோடி மதிப்பில் 400 குடிநீர் திட்டப் பணிகள்.
- 7 ஊராட்சி ஒன்றியங்களில் 38 பள்ளிகள் 261 அங்கன்வாடி மையங்கள், 2 மாணவ–மாணவியர் விடுதிகளுக்கு ரூ.2,704 இலட்சம் மதிப்பில் குடிநீர் வழங்கும் திட்டப் பணிகள்.




*புதிய பேருந்துகள் துவக்கம்*

- ❖ குடிநீர் ஆதாரங்களை செறிவூட்டுவதற்காக ரூ.255.87 இலட்சம் செலவில் 44 தடுப்பணைகள். திருச்செந்தூர் பேரூராட்சிக்கான தனி குடிநீர் திட்டத்திற்கு ரூ.1,192 இலட்சம் மதிப்பில் பணிகள் மக்களின் பயன்பாட்டிற்கு வந்துள்ளது.

## தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம்

- ❖ தூத்துக்குடி மாவட்டத்தில் 120 புதிய பேருந்துகள் விடப்பட்டுள்ளது.
- ❖ 48,241 இலவச பேருந்து பயண அட்டைகள் மாணவர்கள், மாற்றுத்திறனாளிகள், சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கு ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றது.

❖ 5 புதிய நகர வழித்தடங்களில் புதிய பேருந்துகளும், 12 புறநகரப்பகுதிகளில் புதிய பேருந்துகள் இயக்கப்பட்டுள்ளன.

## கலை பண்பாட்டுத்துறை

❖ 1,538 கலைஞர்களுக்கு அடையாள அட்டைகள், விருதுகள். நல வாரியத்தின் மூலம் 73 பயனாளிகளுக்கு ரூ.1.47 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள்.

❖ இசைப்பள்ளியில் பயின்று வரும் 60 மாணவர்களுக்கு ரூ.67,000 உதவித் தொகை.

### தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்

❖ 19 வகையான விளையாட்டுப் போட்டிகள் ரூ.52.49 இலட்சம் செலவில் நடத்தப்பட்டு 37,247 பயனாளிகள் பயன்.

❖ தருவை விளையாட்டு மைதானத்தில் ரூ. 3 கோடி மதிப்பில் உள் விளையாட்டு அரங்கம் அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது.

### நெடுஞ்சாலைத்துறை நபார்டு மற்றும் கிராமச்சாலைகள்

❖ ரூ.5,900 இலட்சம் செலவில் 12 பாலங்கள், 6 சாலைப் பணிகள், 8 சிறுபாலப் பணிகள்.

### நெடுஞ்சாலைத்துறை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு

❖ 222 சாலைப் பணிகள் ரூ.13,166 இலட்சம் செலவில் 176.61 கி.மீ. சாலைகள்.

❖ தூத்துக்குடியில் கோட்ட அலுவலகக் கட்டடம் கட்ட ரூ. 40 இலட்சம்.

❖ திருவைகுண்டம் உட்கோட்ட அலுவலகக் கட்டடம் கட்ட ரூ. 25 இலட்சம்.

❖ திருசெந்தூர் பயணியர் விடுதி கட்ட ரூ. 35 இலட்சம் நிதி ஒதுக்கீடு.

❖ சுற்றுலா திட்டத்தின் கீழ் ரூ. 2.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்து பணிகள் முடிவுற்றது.

**பொதுப்பணித்துறை பராமரிப்புப் பணிகள்**

❖ 425 கட்டட பராமரிப்புப் பணிகள் ரூ. 1148.07 இலட்சம் மதிப்பில் நடைப்பெற்றுள்ளது.

❖ 330 புதிய கட்டடங்கள் ரூ. 6427.49 இலட்சம் மதிப்பில் பணிகள் நடைபெற்றுள்ளது.

**பொதுப்பணித்துறை நீர்வள ஆதார அமைப்பு**

